# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 24 ஞாயிற்றுக்கிழமை (06-06-1993) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 190


# பூநகரிப் பாதையை திறப்பது குறித்து அரசாங்கம் முடிவு எடுப்பதில் தாமதம்

## தெற்கு சூழ்நிலைகள் காரணமாம்

கொழும்பு, ஜூன் 6

பூநகரி — சங்குப்பிட்டி பாதையைத் திறப்பது தொடர்பாக அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் சமர்ப்பித்த யோசனை குறித்து நடவடிக்கை மேற்கொள்வது தெற்கில் உருவான சூழ்நிலைகளால் தாமதமாகி வருகிறது.

அரசின் உயர் மட்டப் பேச்சாளர் ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பூநகரி—சங்குப்பிட்டி பாதை திறப்பதில் உள்ள தாமதம் குறித்து செய்தியாளர் ஒருவர் கேட்ட சமயமே அந்த அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாஸா, முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொலை செய்யப்பட்ட சம்பவங்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## குமாரி கப்பலில் நாளை ஆயிரம் தொன் சீனி வரும்

யாழ்ப்பாணம், ஜூன் 6

நாளை காலை பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் 'குமாரி' கப்பலில் ஆயிரம் மெற்றிக் தொன் சீனி உட்பட 3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துவரப்படுகின்றன.

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இருந்து புறப்பட்ட இந்தக் கப்பலில் ஆயிரம் மெற்றிக்தொன் வெள்ளை அரிசி, 450 மெற்றிக் தொன் புழுங்கல் அரிசி, 300 மெற்றிக்தொன் மைசூர் பருப்பு, 30 மெற்றிக் தொன் பயறு, 50 மெற்றிக் தொன் ரவை, 65 மெற்றிக் தொன் பாடசாலை புத்தகங்கள், 220 பரல் தேங்காய்எண்ணெய், 29 பரல் டீசல் ஆகியன எடுத்துவரப்படுகின்றன.

இக்கப்பலில் தபால் பொதிகள் எடுத்துவரப்படுகின்றனவா என்பது குறித்து நேற்று மாலை வரை தகவல் இடைக்கவில்லை. (உ-5)

## கொழும்பில் கடும் மழை: குமணவில் பொருள்களை ஏற்றும் வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் ''குமண'' கப்பலில் பொருள்களை ஏற்றும் வேலைகள் கடும் மழை காரணமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 18 ஆம் திகதி பருத்தித்துறையை நோக்கி இக்கப்பல் புறப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்தக் கப்பலில் 300 தபால் பொதிகள் எடுத்துவரப்பட இருப்பதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான பெருமளவு பொருள்களும் இந்தக் கப்பலில் ஏற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## மாகாணசபை முறையை தமிழர் ஏற்காதது நியாயமே!

### பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா கூறுகிறார்

''சிங்களப் பிரதேசங்களைக் கொண்ட மாகாணசபைகளிலேயே அரசாங்கம் முறைகேடாக நடந்து கொள்ளும் போது, தமிழ் மக்கள் இந்த மாகாண சபை முறையில் திருப்திப்படாமல் இருப்பது நியாயமானதே''

— இவ்வாறு கூறினார் ஸ்ரீலங்கா நாடாளுமன்றின் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா

பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐ. தே. க. அறுதிப்பெரும்பான்மை பெறாத போதிலும் வடமேல் மற்றும் தென் மாகாணசபைகளுக்கு ஐ. தே. கவினரை முதலமைச்சராக நியமித்திருப்பது குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பது உண்மையே.

எது சரி, எது பிழையாக இருந்தாலும் சட்ட விதிகளின் படியே ஆளுநர்கள் முதலமைச்சர்களை நியமனம் செய்திருக்கிறார்கள்.

மாகாணசபை முறை குழப்பத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

ஐ. தே. கவில் பெரும்பாலானவர்களும், எதிர்க்கட்சியினரும் மாகாணசபை முறையை ஒழிக்கவே விரும்புகின்றனர்.

சிங்களப் பிரதேசங்களில்—பெரும்பான்மை பெற்ற மாகாணசபைகளிலேயே—அரசு முறைகேடாக நடந்து கொள்ளும் போது, தமிழ் மக்கள் மாகாணசபை முறையில் திருப்தி கொள்ளாமல் இருப்பது நியாயமானதே — இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## நல்லெண்ணத் தூதுக்குழு யாழ்.வர அனுமதி கோருகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 6

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த கிறிஸ்தவ ஆயர்கள், குருமார்கள் மற்றும் புத்திஜீவிகள் அடங்கிய குழுவினர் இன்று கொழும்பு வந்து சேர்வர் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பில் இருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

சமாதான விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வரும் இவர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்யவுள்ளனர்.

தாய்லாந்து, மலேசியா, பிலிப்பீன்ஸ், இந்தியா, புருணை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்களை உள்ளடக்கிய இந்த சமாதான குழுவினர் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அனுராதபுரம், வவுனியா ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட பொது மக்களையும், அரச மற்றும், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

ஆசிய ஆயர்கள் மாநாட்டின் ஏற்பாட்டில் — இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் ஆதரவில் — மேற்படி குழுவினர் தமது விஜயத்தை மேற்கொள்கின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சித் தலைவியாக சந்திரிகா தெரிவாகும் வாய்ப்பு

### அனுராவின் ஆதரவாளர்கள் விரக்தி நிலையில்

கொழும்பு, ஜூன் 6

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக சந்திரிகா குமாரணதுங்க தெரிவாகும் வாய்ப்பு அதிகரித்து வருவதாக செய்தி ஏஜென்சிகளில் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அண்மையில் இடம்பெற்ற மாகாணசபை தேர்தல் மூலம் சந்திரிகாவின் செல்வாக்கு உயர்ந்து விட்டதால், அவரின் அரசியல் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது.

சிறிமா பண்டாரநாயக்காவுக்குப் பின்னர் அனுரா தான் செல்வாக்குப் பெறுவார் என எதிர்பார்த்திருந்த அவரின் ஆதரவாளர்கள், சந்திரிகாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதால், விரக்தி நிலையை அடைந்துள்ளனர்.

மாகாண சபைத் தேர்தல் பெறுபேறுகள், அனுராவுக்கு மக்கள் ஆதரவு இல்லை என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டன.

இந்தச் சூழ்நிலையில்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாட்டாளி கட்சி மீது தடை; மத்திய அரசு பரிசீலிக்கிறது

மதுரை, ஜூன் 6

பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்யுமாறு கோரி தமிழக சட்டசபையில் எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தால் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

மத்திய இணை அமைச்சர் கே. வி. தங்கபாலு நேற்று மதுரையில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை பாட்டாளி மக்கள் கட்சி ஆதரித்து குரல் எழுப்புவது குறித்து கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு —

தேச விரோத சக்திகளை காங்கிரஸ் கட்சி எப்போதுமே எதிர்க்கும் என்றும் —

பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்றும் இணை அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டு சி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரப்பனைத் தேடி காட்டில் எல்லை காவற்படை வேட்டை!

லண்டன், ஜூன் 6

பிரபல சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனுக்கு வலை வீசி கர்நாடக—தமிழக மாநிலங்களுக்கு இடையிலான பயங்கர காட்டுப்பகுதியில் இந்திய எல்லைக் காவற்படையினர் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

ஐந்நூறு படையினர் காடுகளில் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய எல்லைக் காவற் படையினர் போர் நடவடிக்கை அல்லாத கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

அண்மைக் காலங்களில் வீரப்பன் கோஷ்டியினர் மறைந்திருந்து தாக்குதல்கள் நடத்தியதிலும், கண்ணி வெடித்தாக்குதல்கள் நடத்தியதிலும் பொலீஸார் பலர் உயிரிழந்து உள்ளனர். இன்னும் பலர் காயமடைந்துள்ளனர்.

இதனால் பொலீஸாரின் மனைவிமார் வீரப்பனை இராணுவத்தைக் கொண்டு தேடிப் பிடிக்க வேண்டும் அல்லது தாங்கள் தீக்குளித்து சாகப் போவதாக பயமுறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் தற்சமயம் தேடப்பட்டு வரும் நபர்களில் மிக முக்கிய நபராக வீரப்பன் விளங்குவதாக பி.பி.ஸி. தெரிவித்தது. (ஒ-6-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

## பழைய மாணவர் தினமும் வருடாந்தப் பொதுக்கூட்டமும்-1993

காலம்: 20 - 06 - 1993 ஞாயிற்றுக்கிழமை
இடம்: கல்லூரி மண்டபம்

**பழைய மாணவர் தினமும் மதிய போசனமும்**

காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகி பி. ப. 2-00 மணிக்கு முடிவடையும்.

மதிய போசனத்தில் பங்குபற்ற விரும்புவோர் முன் கூட்டியே தலைவர் / செயலாளருடன் தொடர்பு கொண்டு உரிய கட்டணத்தை செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர்.

பொதுக் கூட்டம்: பி. ப. 3-00 மணிக்கு ஆரம்பமாகும்.

அங்கத்தவர்கள் தமது வருடாந்த அங்கத்துவப் பணம் 10/- அல்லது ஆயுட்கால அங்கத்துவப் பணம் 100/- ஐ கூட்டத்துக்கு முன்பாக செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். இதுவரை அங்கத்தவர்களாகச் சேராதவர்கள் சேர்ந்து ஒத்துழைக்கவும்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 15 — 06 — 1993க்கு முன்பாக செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

த. முத்துக்குமாரசாமி, தலைவர். (25991) பொ. விக்னேஸ்வரலிங்கம், செயலாளர்.

---

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக

**தமிழோசை சஞ்சிகை**

வெளியீட்டு

## நிதியுதவி நிகழ்ச்சிக்காக

யாழ். குருநகர் புனித யாகப்பர் மகளிர் மன்றம் வழங்கும்

நாட்டுக்கூத்து

## ★ இலங்கேஸ்வரன் ★

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
காலம்: 06 - 06 - 1993 ஞாயிறு (இரு காட்சிகள்)
நேரம்: காலை 10 மணி
மாலை 4 மணி
பிரவேசம்: ரூபா 20/- ரூபா 50/- ரூபா 100/-

காணத் தவறாதீர்கள்!

தமிழ் மன்றம் -
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

விளம்பர அன்பளிப்பு:
QUICK PHOTO
(கலர் பிலிம் பிறிண்டிங்)
Clock Tower Road, Jaffna.
(6237)

---

## 16ஆம் நாள் நினைவலைகள்

### அமரர் இராமலிங்கம் கேசவன்

(மட்டக்களப்பு)
(மருத்துவபீட இறுதிவருட மாணவன் - 1986)

அன்பு மகனே!...இனிய அண்ணாவே!...
ஆருயிர் பேரனே!...
நீ சென்று இத்தனை நாள் மறைந்துவிட்டதையா
ஆயினும்
உன்னிழப்பை எம்மால்
இன்றும் கூட ஜீரணிக்க முடியவில்லை
இன்னுயிர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கும்
இனியவனாய் உலாவருவாயென்றிருந்தோம்
உனது நற்பணியை காலன் விரும்பவில்லைப் போலும்
உனது...
ஆடலும் பாடலும் குறும்புப் பேச்சும்
இன்றும் எம் மனதில் பசுமையாயிருக்குதையா!
நீர்...
எங்கு சென்றீரோ?......
எப்போ வருவீரோ?......
இனிநாம் காண்போமோ?......

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனின் பாதங்களில் இறைஞ்சி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி!

சித்தப்பா குடும்பத்தினரும்,
அம்மம்மாவும்.

"கீதாஞ்சலி",
செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு.
யாழ்ப்பாணம் (25977)

---

## ஆரோக்கிய தாய், சேய் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 6

ஆரோக்கிய தாய், சேய் போட்டி ஒன்று யாழ். மாநகர மகப்பேற்று நிலையங்களிலும், சிகிச்சை நிலையங்களிலும் நடத்தப்பட்டது.

யுனிசெவ் உதவியுடன் யாழ். மாநகரசபையால் நடத்தப்பட்ட இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசும் சான்றிதழும் வழங்கும் வைபவம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாநகர ஆணையாளர் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த செல்வி ஜோசப்பின் கலந்து கொள்வார். (உ)

## மாட்டுவண்டி சவாரிப்போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

ஆவரங்கால் விவசாயிகளால் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சவாரித் திடலில் நடத்தப்படவிருந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி, சவாரித் திடல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இப்போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

---

## பாரதிதாசன்

கல்வி நிறுவனம்

[BECON]

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

G.A.Q. 93 Aug
பேராதனை
மீட்டல் வினா விடை வகுப்பு

பொருளியல்
S. வரதராஜன்
B.A. Hons)

ஆரம்பம்:
07 — 06 — 1993
திங்கள் 3.00 p.m

G.A.Q 94
B.A 94 ] பேராதனை

பொருளியல் வகுப்புகள் நடைபெறுகின்றன
(சி-4797)

---

## "A" LEVEL CENTRE

1ம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**94, 95**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

CHE —
திரு. நாகரட்ணம் Bsc
PHY —
திரு. ஜெயசீலன் Bsc
BOT —
திரு. சிவவீரசிங்கம் Bsc
ZOO —
திரு. ஞானேந்திரன் Dip In Sc
PURE / APP —
திரு. நித்தியானந்தன் Bsc

நேர அட்டவணையை [illegible] பெற்றுக்கொள்ளவும்.
(சி/4795)

---

## இணுவை மஞ்ச உற்சவம்

இணுவில் கந்தசுவாமி கோவில் [illegible] விழா இன்று 06 - 06 - 1993 பிற்பகல் 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகும்.

12 ஆம் நாள் தெய்வீக இசை அரங்கு
8.00 மணிக்கு ஆரம்பமாகும்

★ கெஞ்சிற் கச்சேரி ★

நாதஸ்வரம்:- திரு. N. K. பத்மநாதன்
வயலின்:- திரு. R. இராதாகிருஷ்ணன்
தவில்: திரு T. உதயசங்கர்
மிருதங்கம்:- செல்வன் K. கண்ணதாசன்

இளந்தொண்டர் சபையினரும்,
விழா உபயகாரர்களும்.

(5944)

---

## NORTHERN PROVINCE AFFILIATED UNIVERSITY COLLEGE

## VACANCIES FOR ACADEMIC SUPPORT STAFF

(PERMANENT/TEMPORARY/VISITING)

Applications are invited from suitably qualified persons for the following posts.

1. COLLEGE LECTURER (GRADE II) IN ACCOUNTANCY & FINANCE
2. COLLEGE LECTURER (GRADE II) IN ENGLISH

SALARY SCALE:

Rs. 5850 — 16 x 260 — 10,010 p. m.

NOTE:

1. As the above salary scale is fully operative with effect from 1st January, 1994, the person so appointed will be paid Rs. 5 175/- p.m. during the year 1993.
2. In addition, an amount equivalent to 25% of the above salary will be paid upto 31st December, 1994

QUALIFICATIONS:

(i) First or Second Class Special Degree from a recognized University in the relevant field of study

or

(ii) Pass in a Special Degree with a Post-graduate quaification in the relevant field of study

or

(iii) Such other qualificaiions as approved by the University Grants Commission

and

3 years teaching / research experience in a recognized institution.

and

Postgraduate qualifications in the relevant field of study, duration of which shall not be less than 01 year.

3. Applications giving full name, address, date of birth, educational and professional qualifications experience and any other relevant information with names and address of two referees, should be sent to the ASSISTANT REGISTRAR, NORTHERN PROVINCE AFFILIATED UNIVERSITY COLLEGE, RAILWAY STATION ROAD, VAVUNIYA to reach him on or before 19TH JUNE 1993.

The top left hand corner of the envelope should be marked 'Post of Academic Support Staff'.

4. Applications from employees of University Grants Commission and Higher Educational Institutions / Institutes / Government Departments / State Corporations and Statutory bodies should be Channelled through the Head of respective institutions

However, applicants are advised to send a copy of their application direct to the address given above

Applications received after the closing date and incomplete applications will not be considered.

— DIRECTOR.

Northern Province Affiliated
University College,
Railway Station Road,
Vavuniya.
13th May 1993.

(C-5218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்ததின வாழ்த்து



## செல்வி றொபேட் டிலக்சி

யாழ். பாஷையூர் 48, கடற்கரை வீதி, 'லொறற்றோ' இல்லத்தில் வசிக்கும் றொபேட் - வேர்ஜினி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி டிலக்சி இன்று (06 - 06 - 1993) ஞாயிறு பிற்பகல் 4-00 மணிக்கு தனது முதலாவது பிறந்த தினத்தை பெற்றோர், உறவினர்களுடன் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, ஆசைபாமா, ஐயா, ஞானப் பெற்றோர், அப்பம்மா மற்றும் உறவினர்கள், புனித அந்தோனியார் அருள்பெற்று, பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:

சி. ஜெக்சி, அ. சபினா, அ. கீர்த்திகா.

(சி-5217)

---

- அந்தியேட்டிக்குத் தேவையான (12" x 10" Recopy) புகைப்படங்கள்
- நினைவஞ்சலி, கல்வெட்டு, புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line Half Tone-Colour Block
- றபர் சீல்
- ஓவிய வேலைகள்
- விளம்பர ஸ்ரிக்கேஸ்

தரமாக - குறைந்த விலையில் - குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ள:

**கொழும்பு ஸ்ருடியோ**
யாழ்ப்பாணம்.

(சி-5205)

---

# யாழ். மாவட்ட யு.எஸ். எயிட்
# விவசாயத் திட்டம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். மாவட்டத்தில் யு. எஸ். எயிட் அமைப்பு மேற்கொண்ட விவசாயத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்காக இரு கட்டமாக விவசாயத்திட்டம் ஒன்றை யு. எஸ். எயிட் அமைப்பு மேற்கொண்டிருந்தது.

மூன்றாம் கட்டமாக ஒரு தொகை பணத்தை சுழற்சி முறையில் விவசாயிகளுக்கு கடனாக வழங்கும் விவசாயத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியது. இத்திட்டம் அடுத்த மாதத்துடன் முடிவுறுகிறது.

இனிமேல் தாம் உதவி வழங்கப் போவதில்லை என்றும் —

செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்லை என்றும் —

தம்மால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து கிடைக்கும் பணத்தை விவசாயிகளுக்கு திட்டம் வகுத்து வழங்குமாறும் — இந்த அமைப்பு விவசாயத் திட்டத்தை அமுல் செய்யவுள்ள கெயர் இன்ரநஷனல் அமைப்பைக் கேட்டுள்ளது. (க-3)

## மந்துவில் கொலை: எண்மர் கைது

தென்மராட்சி, ஜூன் 6

மந்துவில் கொலை தொடர்பாக எட்டுப்பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மந்துவில் மேற்கைச் சேர்ந்த லண்டன் சிவில் என்ஜினியர் சதாசிவம் செல்வக்குமார் கடந்த மாதம் 26ஆம் திகதி இரவு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டது தெரிந்ததே. (க-117)

## மீட்பு நிதி

இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையும் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்பு நிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [க]

## கணித பாட விசேடசெய்திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

கணித பாடத்தில் மாணவர்களுக்கான விசேட செய்திட்டத்துக்கான முதலாவது அமர்வு எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தில் நடைபெறும். [க]

---

மீசாலை தெற்கு

அருள்மிகு சித்திரவேலாயுத சுவாமி

# மகா கும்பாபிஷேகம்

கிரியாரம்பம்: **06-06 1993** ஞாயிறு காலை 8 மணி
கும்பாபிஷேகம்; **09 - 06 - 1993** புதன் காலை 6 மணி
பிரதமகுரு; ''வேதாகம சோதிட பூஷணம், சிவாசார்ய திலகம்'' சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் அவர்கள்.

அனைவரும் வருக! திருவருள் பெறுக!!

- பரிபாலன சபை.

(25949)

---

# வைத்திய சேவை
# இடமாற்றம்!

**Dr. S. பாலச்சந்திரன் (R. M. O.)**
(முன்னாள் சங்கானை, ஊர்காவற்றுறை, யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்)

முன்னர் 1ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்— வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக இயங்கிவந்த பாபா கிளினிக் தற்போது பிளாக் றோட், சங்கானையில் (இல்லத்தில்) நடைபெறுகிறது.

நேரம்

தினமும் காலை 8 00 மணி — பகல் 12-00 மணி வரை
மாலை 4-00 மணி — மாலை 6-00 மணி வரை

(25959)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

இறுதிப் பிரிவு

**O/L SAT & SUN CLASSES**
(பகல் 12.30 முதல் மாலை 5.00 மணி வரை)

எமது வழமையான தனித்துவம் வாய்ந்த யாழ். முன்னணி ஆசிரியர் குழு

ஆரம்பம்:

**06 - 06 - 1993 [இன்று]**
பகல் 12.30 மணி

★ புதிய அனுமதிகளை முன்கூட்டியே பெற்று, இறுதி நேர இட நெருக்கடியை தவிர்த்துக் கொள்ளவும்.

(சி-4794)

---

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

விநாயகர் கிருபையை முன்னிட்டு நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் வைகாசித் திங்கள் 24 ஆம் நாள் (06 - 06 - 1993) ஞாயிற்றுக்கிழமை பகல் 11-10 மணிமுதல் 12-40 மணிவரையுள்ள பூராட நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| திரு. திருமதி பீதாம்பரம் தம்பதிகளின் (சாவகச்சேரி) சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **இரவிச்சந்திரன்** அவர்களுக்கும் | திரு. திருமதி இராசையா தம்பதிகளின் (குப்பிளான்) புத்திரி திருநிறை செல்வி **ஜெகதீஸ்வரி** அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்: **Hotel Bahnhof, Burgdorfstr. 8, 3510 Konolfingen, Switzerland.**

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி S. பீதாம்பரம் (சாவகச்சேரி) திரு. திருமதி இராசையா (குப்பிளான்)
மற்றும் உறவினர்களும், நண்பர்களும்

வரவேற்பு உபசாரம் இன்று (06 - 06 - 1993) ஞாயிற்றுக்கிழமை மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

திரு. திருமதி நடராசா தம்பதிகள்,
... வீதி, கல்வயல்,
சாவகச்சேரி.

(25978)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த

**அமரர் எஸ். ரி. கதிரவேற்பிள்ளை**
(வலிகாமம் மேற்கு பிரதேசசபை செயலாளர்-சுழிபுரம்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 03 — 01 — 1934 | 08 — 05 — 1993 |

பண்டத்தரிப்பு பட்டின சபைதனில்
பன்னெடுங்காலமாய் தலைமை பூண்டு
கண்ணியமுடன் கடமைகள் செய்து
கனிவுடன் காலமும் பழகி மகிழ்ந்து
எண்ணற்ற சேவைகள் எளிதினிலாற்றி
எல்லோர் மனதிலும் நற்பெயர் பெற்ற
அண்ணல் கதிரவேற்பிள்ளை ஆத்மா சாந்தியுற
அரனடியை வேண்டுகின்றோம்.

பண்டத்தரிப்பு பட்டின அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

வலி-தென் மேற்கு பிரதேசசபை,
பண்டத்தரிப்பு பட்டினம்.

(25983)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Diabetics (நீரிழிவு) உள்ளவர்கள் பாவிக்கக்கூடிய முறையில் ஆட்டா மா, குரக்கன் மா, ஒடியல் மா விற்பனைக்கு உண்டு உங்கள் தேவைகளுக்கு அண்ணா கோப்பிக் கடை; யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில். [சி/4791]

## FOR SALE

Piano (Chappel), Piano Accordian (37 Bass) Ideal For Beginners, 28. Kachcheri East Lane, off Kandy Rd., Chundikuli. (6220)

## தேவை

சிறு தொழில் சம்பளத்துடன் பழகக்கூடிய இளைஞர்கள் தேவை. தொடர்பு: கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1. நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். [25965]

## O/L MATHS

புலமைப் பரிசில் வகுப்பில் இருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (25989)

## காணவில்லை

வெள்ளை பொமனேரியன் (பெரிய) ஆண் நாயை 02 - 06 - 1993 முதல் காணவில்லை. அதனைப் பற்றிய தகவல் தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும். தகவல் கொடுப்பவர் விவரம் இரகசியமாக வைக்கப்படும். தொடர்பு: இல 123, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (25981)

## வகுப்புகள்

City and Guilds of London Institute, 627 Quantity Surveying – Part – I வகுப்புக்கள் 07-06 93 இல் ஆரம்பமாகி திங்கள் புதன் கிழமைகளில் காலை 6-30 — 8-30க்கு நடைபெறும். து. விசாகபதி, பாடசாலை ஒழுங்கை, தாவடி. [259 42]

## இலவச திருமண சேவை

41 வயது, மகம், செவ்வாய் 4 மணப்பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. தாரம் இழந்தவர்களும் ஆலோசிக்கப்படும். சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (25913)

29 வயது, விசாகம், சுவிஸ் மணமகனுக்கு இலங்கை திருமணத்துக்கும். 25 வயது. கார்த்திகை, செவ்வாய் 8 கனடா மணப்பெண்ணுக்கு கனடாவிலும் மணமக்கள் தேவை. விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (25910)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உடன் விடை கிடைக்கும். ஜாதகம், குறிப்பு கைரேகை, எண்சோதிடம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (25952)

## பெயர் மாற்றம்

யாழ். நகரைவசிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25587)

## பயிற்சி வினாத்தாள்கள்

புலமைப் பரிசில் வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு வாரமும் விற்பனையாகின்றன. விலை ரூபா 10/-. மங்களா கல்விச் சேவை வெளியீடான இவை கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீலங்கா, மது, கொக்குவில். (5942)

## ரூபவாஹினி பணிப்பாளர்

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக திரு. சுனில் சரத் பெரேரா நியமனம் பெற்றுள்ளார்.

இவர் ஐ.தே.கவின் மத்திய செயற்குழுவின் முன்னாள் உறுப்பினராவார். அண்மையில் காலஞ்சென்ற அமைச்சர் வின்சன்ட் பெரேராவின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். (ஒ-6)

## அத்வானி மீண்டும் தலைவர்

பாரதீய ஜனதாக் கட்சியின் புதிய தலைவராக திரு. எல். கே. அத்வானி மீண்டும் தெரிவாகிறார்.

தலைமைப் பதவிக்கு இவரின் பெயரில் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வேறு எவரும் போட்டியிடவில்லை.

திரு. அத்வானி தலைவராகத் தெரிவு செய்யப்படுவது பற்றி கட்சித் தலைமை உத்தியோக பூர்வமாக அறிவிக்க உள்ளது.

தற்போது கட்சியின் தலைவராக தீவிர போக்குடைய டாக்டர் முரளிமனோகர் ஜோஷி இருந்து வருகின்றார். அதற்கு முன்னர் அத்வானி தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


மீண்டும் யாழ் நகரில்..

றொலெக்ஸ் ஸ்தாபனத்தாரின்

தேன்சிந்தும் ஐஸ் கிறீம் வகைகள்

- ஸ்பெசல் ஐஸ்கிறீம்
- புறூட் சலட் ஐஸ்கிறீம்
- சொக்லட் ஐஸ்கிறீம்
- வனிலா ஐஸ்கிறீம்

மற்றும் சர்பத், கிறீம்சர்பத், ஐஸ் கோப்பி, அனைத்து குளிர்பான வகைகளுக்கும், சுவைமிகு கோழிப் புரியாணி வகைகளுக்கும் மீண்டும் உங்களை அழைக்கின்றார்கள்.

- ஹோட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்

ஹோட்டல் றொலெக்ஸ்

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[25976]


# முக்கிய அறிவித்தல்

தரம் நம்பிக்கை நாணயமுடைய

## புனிதா நகை மாளிகையை

04 - 06 - 1993 முதல் இல. 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு மாற்றம் செய்துள்ளோம். இதை அறிந்தவர்கள் அறியாதவர்களுக்கு அறியப்படுத்தவும்.

(6231) – உரிமையாளர்.

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அச்சுவேலியில் அரசபடையோடு ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த

## லெப். க. நவநிதி [பவான்]

வீரத்தாயின் மடியில்: **23—04 1966**

வீரமண்ணில்: **06 — 06 — 1987**

கூலிப்படைகள் கூவென்றோடிட
குண்டுகள் தீர்த்த இளம்புலி நவநிதி
சீறிப்பாயும் சீற்றம் கொண்டுமே
மாற்றான் படையை சல்லடை போட்டனன்
ஊற்றாய் வீர உணர்வுகள் நிரம்பிய
மேஜர் அல்பேட்டின் சகோதரன் இவனோ
வேகம் குறையா வீறுகொள் வேங்கை
மோகத் தமிழில் தாகங் கொண்டவன்
பாவந் தேடும் பாதகப் படையினர்
மறைவினில் ஏவிய மாயக் குண்டினை
மார்பினில் ஏற்று மரபினைக் காத்த
தியாகியின் ஆத்மா சாந்தி கொண்டிடவே
ஈழம் மீட்கும் சக்தியாய் மாறுவோம்.

உன் பிரிவால் வாடும்:

பெற்றோர், சகோதரர்கள்,
அண்ணிமார், உறவினர்கள், நண்பர்கள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (25966)

உ
சிவமயம்

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 24ஆம் நாள் (06-06-1993) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-38 மணி முதல் 12-18 மணி வரையுள்ள ★ சுபமுகூர்த்த வேளையில் ★

| | |
|---|---|
| சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் (J. P) அவர்களின் சிரேஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன் **மாதவன் [மது]** அவர்களுக்கும் | சிவஸ்ரீ சோ. விஜயரத்தினக் குருக்கள் அவர்களின் சிரேஷ்ட புத்திரி திருநிறைசெல்வி **கீதா** அவர்களுக்கும் |

புற்றளை அருள்மிகு சித்தி விக்கினேஸ்வரப் பெருமானின் திருவருள் துணைகொண்டு, சுவிஸில் இன்று திருமணம் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் ★ அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். ★

இங்ஙனம் தங்கள் நல்லாசிகளை நாடும்:

| | |
|---|---|
| திரு. திருமதி<br>சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர்<br>(பிரதமகுரு)<br>முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,<br>வல்வெட்டித்துறை. | திரு. திருமதி<br>சிவஸ்ரீ சோ. விஜயரத்தினக் குருக்கள்<br>(பிரதமகுரு)<br>புற்றளை பிள்ளையார் தேவஸ்தானம்,<br>புலோலி. |

(25980)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி





தோற்றம்: 25 — 10 — 1971

வீரமரணம்: 06 — 06 — 1989

## ஏரம்பமூர்த்தி விஜயமூர்த்தி

(ராஜன் / விசு)

நெஞ்சிருக்கும் வரைக்கும் நினைவிருக்கும்
நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே
நீ இங்கில்லாத துன்பம் பெருகுதே!

ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:

அன்பு அப்பா, அம்மா,
அண்ணன்மார், அக்காமார்,
மைத்துனர்கள், மருமக்கள்.

வி. எம். வீதி,
பருத்தித்துறை. (25988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இன ஒழிப்பே உள்நோக்கம்

யாழ் போதனா வைத்திய சாலைக்கு பிரிட்டனால் நன்கொடையாக வழங்கப்பட்ட வைத்திய உபகரணங்கள் வெலிசறையில் உள்ள சுகாதார அமைச்சின் பண்டசாலையில் தேங்கிக் கிடக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா அரசின் எதிர்ப்புக்கு மத்தியில் பிரிட்டன் இவற்றை அனுப்பி இருந்தது.

எக்ஸ்ரே இயந்திரங்கள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் நவீன வைத்திய சாதனங்கள் எனப் பலதரப்பட்ட பொருள்கள் அடங்கிய இந்த அன்பளிப்புத் தொகுதியின் பெறுமதி ரூபா 15 கோடிக்குச் சற்று மேற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் அனுப்பப்பட்ட இந்த உபகரணங்கள் ஐந்து மாதங்கள் கழிந்தும் இன்னும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இது மனிதாபிமானமற்ற, வன்மையான கண்டனத்துக்கு உதவியது.

முதலாவது கட்ட ஈழப்போரிலும், அதன் பின்னர் 1990ஆம் ஆண்டு ஆரம்பமாகி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இரண்டாவது கட்ட ஈழப்போரிலும் பெரிதும் பாதிக்கப்பட்ட பொது அமைப்புகளில் யாழ். போதனா வைத்தியசாலையும் ஒன்று.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் மேற்பார்வையின் கீழ் யாழ் போதனா வைத்தியசாலைப் பகுதி கொண்டுவரப்பட்டு, பாதுகாப்பு வலயம் பிரகடனம் செய்யப்படுவதற்கு முன்னர், படையினரின் ஷெல் மற்றும் தாக்குதல்களினால் யாழ். போதனா வைத்தியசாலையின் கட்டடங்களுக்கும் தளபாடங்களுக்கும், வைத்திய உபகரணங்களுக்கும் பெரும் சேதம் விளைவிக்கப்பட்டது.

இவ்வாறான பாதிப்புக்களால் வைத்தியசாலை தற்போது போதியஎக்ஸ்ரே வசதிகள், ஆய்வு கூட வசதிகள், சத்திரசிகிச்சைவசதிகள், இன்றி இயங்கி வருகின்றது.

குடாநாட்டு மக்கள் புதுப் புது நோய்களினால் பாதிக்கப்படுவதும் போதிய மருத்துவ வசதி இன்றி வைத்தியசாலை நிர்வாகம் அவதிப்படுவதும் நாளாந்த நிகழ்ச்சி ஆகும்.

ஆகவே தற்போதைய யுத்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை மக்களுக்கு ஆற்றும் அளப்பரிய சேவைகளையும் —

அதன் அத்தியாவசிய தேவைகளையும் கருத்தில் கொண்டே பிரிட்டிஷ் அரசு இந்த உபகரணங்களை அனுப்பி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வடக்கில் இயல்பு நிலை ஏற்படாததினால் இவற்றை உடனடியாக அனுப்பி வைக்க முடியாது என்று ஸ்ரீலங்கா அரசு நொண்டிச்சாட்டுக் கூறலாம். ஆனால் இன அழிப்பே அரசாங்கத்தின் உள்நோக்கம் ஆகும்.

வடபகுதி மக்களின் வைத்தியத் தேவைகளை பூர்த்தி செய்யாமல் அவர்களை மரணமடையச் செய்து மறைமுகமாக இன அழிப்புச் செய்யும் தனது நோக்கத்துக்கு இது குந்தகமாகி விடும் என்று நினைக்கின்றது போலும்.

இதற்கு இடம் கொடுக்காமல் பிரிட்டிஷ் அரசு தான் அன்பளித்த உபகரணங்கள் உரியவர்கள் கை சேருவதற்கு கொழும்பு அரசுக்கு வலுவான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும்.

## இன்று

குருநகர், ஜூன் 6

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கு இன்று மாலை 4 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறும்.

"சாயா கிரகங்கள் தீயவையா?" என்னும் தலைப்பில் திரு. வே. சின்னத்துரை ஆய்வுரை நிகழ்த்துவார். சோதிடம் கற்பவர்களுக்கான பயிலகமும் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும். (உ-51)

o o o

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினர் வருடாந்தம் வெளியிடும் 'தமிழோசை' சஞ்சிகையின் வெளியீட்டு நிதிக்காக — குருநகர் புனித யாக்கப்பர் மகளிர் மன்றம் வழங்கும் இலங்கேஸ்வரன் நாட்டுக்கூத்து நிகழ்ச்சியின் இருகாட்சிகள் இன்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

இன்று முற்பகல் 10 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்குமாக இரு தடவைகள் நாட்டுக்கூத்து மேடையேற்றப்படும்.

### பாடசாலைகளில்

வட்டுக்கோட்டை, ஜூன் 6

அராலி இந்துக்கல்லூரி வருடாந்தப் பரிசளிப்புவிழா நாளை மாலை 3-30மணிக்கு கல்லூரி அரங்கில் நடைபெறும். இவ் விழாவில் பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் கலந்துகொள்வார். (உ-161)

o o o

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு மாலிசந்தி விநாயகர் ஆலய முன்றிலில் வித்தியாலய அதிபர் திரு. செ.செல்வராசா தலைமையில் நடைபெறும். வடமராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு ச. செல்லத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-109)

### கலைஞர் ஆளுநர் சந்திப்பு

திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் திரு மு கருணாநிதி நேற்று ஆளுநர் திரு. சென்னாரெட்டியை அவரது இல்லமான ராஜ்பவனில் சந்தித்து சுமார் 40 நிமிடங்கள் பேச்சு நடத்தினார்

இது ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று தி.மு கழகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

## விளையாட்டு நிகழ்வுகள்

"டொனால்ட் கணேஷகுமார்" ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் 4 ஆவது வருடாந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதும்.

ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் திரு எஸ். சோதிலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

டாக்டர்கள் எஸ். பி. ஆர். சீர்மாறன், ஏ. ஸ்ரீபதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகப் பங்குபற்றுவர்

o o o

"உதயன்" கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டம் ஒன்று நாளை மாலை பருத்தித்துறை திக்கம் முனை விளையாட்டு மைதானத்தில் நடைபெற இருக்கிறது- இந்த ஆட்டத்தில் கண்ணகி வி. க. "ஏ" அணியை எதிர்த்து விநாயகர் வி. க. அணி மோதும். (உ)

## சனசமூக நிலைய கண்காட்சி இன்று இறுதிநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்டு வரும் ஈழத்து நூல், சஞ்சிகை ஓவியம், சிற்பம், புகைப்படம், சித்த மருத்துவம் பற்றிய கண்காட்சியின் இறுதி நாள் இன்றாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட மேற்படி கண்காட்சியை பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டு வருகின்றனர்.

கண்காட்சியை ஒட்டி இன்று பிற்பகல் அங்கு இடம்பெறும் உரை அரங்கில் "ஈழத்துக் கலை வளர்ச்சி" என்னும் தலைப்பில் திரு. கே. சிதம்பரநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு ஆ. க. நடராசா, திரு. சண்முகலிங்கன், திரு. சசி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உரையாற்றுவர்.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) உரை அரங்கிற்குத் தலைமை வகிப்பார்.

பிற்பகல் 5 மணிக்கு பரிசளிப்பு வைபவம் இடம் பெறும். யாழ். அரச அதிபர் திரு, கா. மாணிக்கவாசகர் அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தொடர்ந்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு,சு. டிவகலாலா நிறைவுரை வழங்குவார்.

இந்தக் கண்காட்சி நீடிக்கப்பட மாட்டாது முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டபடி கண்காட்சி இன்றுடன் முடிவடையும் என கண்காட்சி குழுக்களின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (உ 5)

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

சிறுப்பிட்டி திருவருள்மிகு செல்லப்பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர் வரும் புதன்கிழமை (9 ஆம் திகதி) நடைபெறவுள்ளது.

அன்று காலை 10. 38 மணிக்கும் 11 48 மணிக்கும் இடையில் வரும் சுபவேளையில் கும்பாபிஷேகம் இடம் பெறும்.

மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு விழாக் குருமார் ஆசியுரையும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் அருளுரையும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரையும் நிகழ்த்துவர்.

கும்பாபிஷேகத்தை ஒட்டிய கிரியைகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன. (அ)

### இளைஞர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 6

செப்ரிசிமியா (குருதி அழுகல்) நோயினால் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் அங்கு நேற்று மரணமானார்.

சாவகச்சேரி, டச் வீதியைச் சேர்ந்த எஸ். சிவகுமார் (வயது 23) என்ற இளைஞரே மரணமானவராவார். (உ-15)

# மாணவர் மத்தியில் வாசிக்கும் பழக்கம் அருகி வருகிறது

### கல்விப் பணிப்பாளர் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 6

"பாடசாலை நூல் நிலையங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. மாணவர்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கம் அருகி வருகின்றது கல்வி அறிவு பெற்றுப் பண்பு வளர்வதற்கு வாசிப்பு மிக முக்கியமானது"

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தால் நடத்தப்படுகின்ற ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், சித்த மருத்துவக் கண்காட்சியின் திறப்பு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலையில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றபோது தொடக்கவுரை நிகழ்த்திய யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினார்.

யாழ். மாவட்டச் சன சமூக நிலையங்களின் சம்மேளனத்தின் தலைவர் திரு. வை. செகராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் கல்விப் பணிப்பாளர் மேலும் பேசுகையில், இக் கண்காட்சி வாசிக்கும் பழக்கத்தை குறிப்பாக மாணவர் மத்தியில் ஊக்குவிக்க உதவும் என்று தாம் நம்புவதாகக் கூறினார். அத்துடன் எழுத்தாளருக்கும் இக் கண்காட்சி உற்சாகம் அளிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

திறப்புவிழாவில் அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. சு ப. தமிழ்ச்செல்வன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மாவட்டத் தளபதி திரு அன்பு தேசியக் கொடியேற்ற சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கத்தின் தமிழ்த் தாய் வணக்கத்துடன் பல பெரியோர்கள் மங்கள விளக்கேற்ற திறப்புவிழா ஆரம்பமாகியது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வீ. பி பாலசிங்கம், [illegible] இந்துக் கல்லூரி அதிபர் திரு. [illegible]லிங்கம், கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், கூட்டுறவு விரிவாக்க உதவி ஆணையாளர் திரு. தி. சபாரெத்தினம், யாழ். மாவட்ட உதவி அரசியற் பொறுப்பாளர் திரு. பாலன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்

பிரதமவிருந்தினர் திரு. தமிழ்ச்செல்வன் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

கட்டுப்பாடாக ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சி ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையாகச் சென்று ஆறுதலாகவும், அமைதியாகவும் பார்த்தார்கள். அவர்கள் தமது வேறுபட்ட ரசனைகளுக்கேற்ப ஒவ்வொரு பகுதியிலும் தரித்து நின்று கண்காட்சியை ரசித்தார்கள்.

நூல், சஞ்சிகைகள் பகுதிகளைப் போலவே ஓவியம், சிற்பம், புகைப்படம் ஆகிய பகுதிகளையும் இளவயதினர் ஆவலுடன் பார்வையிட்டனர்.

சித்த மருத்துவத் துறைப் பகுதியும் பார்வையாளரின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்ததைக் கவனிக்கக்கூடியதாக இருந்தது. சித்த மருத்துவத்தை இன்றைய பரம்பரைக்கு அறிமுகம் செய்து வைக்கும் பகுதியாக அது அமைந்தது. (க)

## ஆலயங்களில்

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தின் 150 ஆவது ஆண்டு விழா கடந்த வெள்ளியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. ஆண்டு விழா நிகழ்வுகள் எதிர் வரும் 13 ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறும். (உ-5)

o o o

கச்சாய் கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் வைபவம் நாளை வழமை போல நடைபெறவுள்ளது.

o o o

இணுவில் கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தில் இன்று மஞ்சத் திருவிழா இடம்பெறும்.

உற்சவத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தெய்வீக இசை அரங்கில் "நாதஸ்வர கான கலாவாருதி" எஸ். கே. பத்மநாதனின் கெஞ்சிற் கச்சேரி இடம்பெறும்.

o o o

யாழ்ப்பாணம் ஆரியகுளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலில் இன்று இரவு 7 மணிக்கு அம்மன் திருவீதி உலா திருவிழா இடம்பெறும்.

o o o

மீசாலை தெற்கு அருள்மிகு சித்திரவேலாயுதர் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று ஆரம்பமாகி எதிர் வரும் 9 ஆம் திகதி வரை நடைபெறும்.

o o o

நாசர்கோவில் குடாரப்பு தூவில் கண்ணகை அம்மன் கோவிலிலும்—

பளை, அல்லிப்பளை அறத்தி அம்பாள் கோவிலிலும்—

வேம்போடு கேணி நவின வெளி அம்பாள் ஆலயத்திலும் வைகாசி விசாகத்தையொட்டிய பொங்கல் பூசைகளும், உற்சவங்களும் நாளை மறுதினம் பகல் வேளை நடைபெறவுள்ளன.

(உ-3-5-117)

o o o

சுன்னாகம் வரியப்புலம் முத்துமாரி அம்மன் கோவில் மஹா சங்காபிஷேகம் இன்று நடைபெறுகின்றது.

இதனையொட்டி இன்று மாலை சுவாமி வீதியுலா வரும் நிகழ்ச்சியும் மற்றும் இசை நிகழ்ச்சிகள், மேளக்கச்சேரி என்பனவும் இடம்பெறவுள்ளன. (உ-85)

o o o

யாழ்ப்பாணம், ஜூன் 6

கைதடி கிழக்கு வீரமாகாளி அம்பாள் வைகாசித் திங்கள் பொங்கல் விழா நாளை நடைபெறுகிறது.

மாலை 6 மணிக்கு அபிஷேகம் பூசை என்பன ஆரம்பமாகி நள்ளிரவு 12 மணிக்கு பொங்கல் இடம்பெறும்.

சமயச் சொற்பொழிவு, இன்னிசை நிகழ்ச்சிகள் என்பனவும் நடைபெறும். (அ)

### மீண்டும் ஆளுநராக சர்வானந்தா

கொழும்பு, ஜூன் 6

மேல் மாகாண சபையின் ஆளுநராக மீண்டும் திரு சுப்பையா சர்வானந்தா நேற்று ஜனாதிபதி விஜேதுங்கா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த ஐந்தாண்டுகள் ஆளுநராக பதவி வகித்த திரு. சர்வானந்தாவின் பதவிக் காலம் காலாவதியானதை அடுத்து அவர் மீண்டும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

திரு சர்வானந்தா முன்னாள் பிரதம நீதியரசர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

### "வாதுவ" புறப்பட்டது

பருத்தித்துறையில் தரித்து நின்று பொருள்களை இறக்கிய "வாதுவ" கப்பல் பொருள்கள் இறக்கி முடிக்கப்பட்டதை அடுத்து நேற்று கொழும்பு நோக்கிப் புறப்பட்டது, இக்கப்பலில் வெளியிடங்களுக்கான தபால்பொதிகளும் எடுத்துச் செல்லப்பட்டன. (உ-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி, ரூபவாஹினி தலைவர்கள்

## ஈரானில் இருந்த வேளை பதவிகள் பறிபோயின!

கொழும்பு, ஜூன் 6

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவினால் நியமிக்கப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு மைத்திரிபால, ரூபவாஹினி தலைவர் திரு. வாரியவாசம் ஆகியோரின் பதவிகள், அவர்கள் இருவரும் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றைமேற்கொண்டு ஈரானில் தங்கியிருந்தபோதே பறிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவருக்கும் பதிலாக சிரேஷ்ட அரச அதிகாரிகளான குமார அபயசிங்க, பீற்றர் அபயசேகர ஆகிய இருவரையும் முறையே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும், ரூபவாஹினிக்கும் புதிய தலைவர்களாக தகவல்துறை அமைச்சர் லொக்கு பண்டார நியமித்திருந்தார். என்பது தெரிந்ததே. (ஓ-எ)

## துருக்கியர் மீது மீண்டும் நேற்று நாஸி குழு தாக்கு

பொன், ஜூன் 6

ஜேர்மனியில் வலதுசாரி நாஸிக் கும்பல் ஒன்று மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது. நேற்று துருக்கியர்களின் வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அந்த வீடு எரிந்து நாசமானது.

வீட்டில் இருந்த துருக்கிய குடும்பம் மயிரிழையில் உயிர் தப்பியது தாயும் ஐந்து பிள்ளைகளும் தீயில் இருந்து பாய்ந்து வெளியே ஓடித் தப்பிக் கொண்டனர்.

கடந்த வாரம் நடந்த தாக்குதல் சம்பவம் ஒன்றில் துருக்கியர்களான இரு பெண்களும், 3 பெண் குழந்தைகளும் தீயில் கருகி உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே (ஒ-6)

### நல்லெண்ணத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றனர்.

இன்று கொழும்பு வந்துசேரவுள்ள இந்த சமாதான தூதுக்குழுவினர் யாழ். விஜயம் செய்ய அனுமதி கோரி கூட்டுப்படைகள் தலைமையகத்திடமும், அத்தியாவசிய சேவைகள் பிரிவினரிடமும், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திடமும் விண்ணப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

சம்பந்தப்பட்ட சகல தரப்பினரின் அனுமதி கிடைத்ததும் அனேகமாக இவ்வார இறுதியில் அவர்கள் யாழ். வரக்கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த வண. சோமாச்சை குசலிகிற்றோ, பிலிப்பைன்ஸ் ஆயர் மேதகு ஜூவாஸ் டி டொயஸ் பியூமிலஸ், மலேசிய ஆயர் மேதகு செல்வநாயகம், பிலிப்பீன்ஸைச் சேர்ந்த வண. இரஸியோ கோர்ட்ஸியோ, வட இந்தியப் பேராசிரியர் அஸ்கர் அலி எஞ்சினியர், புருணையைச் சேர்ந்த திருமதி கரோலின்ஸ் பயர்ஸ் ஆகியோர் இந்தத் தூதுக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (உ 6)

## ராவுக்கு சுகவீனம்

புதுடில்லி, ஜூன் 6

உடல் நலமின்மை காரணமாக இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் தனது பூட்டான் பயணத்தை கால வரையறையின்றி ஒத்திவைத்துள்ளதாக புதுடில்லியிலிருந்து அறிவிக்கப்படுகிறது.

இம்மாத இறுதியில் 72 வயதை பூர்த்தி செய்யவிருக்கும் அவருக்கு புளூ காய்ச்சல் பீடித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது (உ-5)

### பாட்டாளி கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து விடுதலைப் புலிகள் தப்பித்து வருவதற்கு மத்திய அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று ஜெயலலிதா கூறியது குறித்து செய்தியாளர் கேட்டதற்கு —

சமூக விரோதிகள் தப்பிச் செல்வதை தமிழக அரசு வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது என்றும் —

ஒரு மாநில அரசுக்கு சட்டம் - ஒழுங்கை காப்பாற்றும் கடமையுள்ளது என்றும் —

மத்திய அரசு மீது குற்றம் சுமத்தி தப்பித்துக்கொள்ள முடியாது என்றும் திரு. தங்கபாலு பதிலளித்தார். (ஒ-7)



## பெண் விற்பனையாளர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் மருந்தகம் (Pharmacy) ஒன்றிற்கு அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. விரும்புவோர் விண்ணப்பத்துடன் 09 - 06 - 1993 புதன்கிழமை காலை 9 மணிக்கு நேரடியாக சமுகம் தரவும்.

லக்சுமி ரேட்ஸ்,

கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி.

(25992)





தவில் மேதை

N. R. சின்னராசா ஞாபகார்த்த

## தங்கப்பதக்க இசைப்போட்டி

மேற்படி இசைப்போட்டி (வாய்ப்பாட்டு) 26-6-93, 27-6-93 ஆம் திகதிகளில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 15 06 1993

போட்டி மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;-

அண்ணா தொழிலகம்

இல. 4, நவீன சந்தை,

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர்

இளந்தொண்டர் சபை,

இணுவில் கந்தசாமி கோவில். (5945)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ★ அரசமைப்பைத் திருத்துவதற்கு

# சு.க. அதிருப்தியாளர்களின் ஆதரவைப் பெற முயற்சி

### நாடாளுமன்றில் 2/3 பெரும்பான்மை தேவை

கொழும்பு, ஜூன் 6

அரசமைப்பைத் திருத்துவதற்குத் தேவையான ஆதரவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிருப்தியாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என அரசு உயர்பீடம் கருதுவதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

அரசமைப்பைத் திருத்துவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை — அதாவது குறைந்தது 150 எம். பிக்களின் ஆதரவு — அரசுக்குத் தேவை.

ஐ. தே. கவின் எம். பிக்கள் 125 பேர் தற்போது சபையில் உள்ளனர். அது தவிர முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தோழமை அமைப்புகளைச் சேர்ந்த சுமார் ஏழு எம். பிக்கள் ஐ. தே. கவுக்கு ஆதரவு வழங்குவர் என எதிர்பார்க்கப் படுகிறது.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறுவதற்குத் தேவையான மிகுதி 18 எம். பிக்களின் ஆதரவையும் ஸ்ரீ.ல.சு. கவின் அதிருப்தியாளர்கள் மத்தியிலிருந்து பெறலாம் என அரசு உயர்பீடம் கருதுகிறதாம்.

ஸ்ரீ ல சு. கட்சிக்குள் நிலவும் அதிகாரப் போட்டி, கருத்து வேறுபாடு ஆகியவற்றை இந்த எம். பிக்களின் ஆதரவைப் பெறுவதற்கு உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்றும் அரசு உயர்பீடம் கருதுகிறது.

அரசமைப்புத் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசு தனியான அமைச்சு ஒன்றை உருவாக்கியிருப்பது தெரிந்ததே. (உ-6)

### தாக்குதல்

அராலிக் கடற்பிராந்தியத்தில் இருந்து நேற்றுக் காலை 7 மணிக்கு அராலி கரையோரப் பகுதியை நோக்கி கடற்படையினர் கடுமையான பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை 2 மணிக்கு பலாலி இராணுவ முகாமில் இருந்து தெல்லிப்பழைப் பகுதியை நோக்கியும், நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு காரைநகர் இராணுவ முகாமில் இருந்து பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளை நோக்கியும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

## இரத்தினபுரியில் வெள்ள அபாயம்!

இரத்தினபுரியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அங்கு மிக மோசமான வெள்ள அபாயம் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

தற்சமயம் களுகங்கை நிரம்பி ஓடுவதால், இரத்தினபுரி பஸ் நிலையத்தில் ஐந்து அடி உயரத்துக்கு வெள்ளம் காணப்படுகிறது.

தாழ்ந்த பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், களனி கங்கையும் பெருக்கெடுக்கும் அபாயம் தென்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## "இழந்தவர்கள்" நூல் வெளியீடு

யாழ். புனித சவேரியார் உயர்குரு மடத்தின் ஆறு குரு மாணவர்களின் கூட்டு முயற்சியில் ஆக்கப்பட்ட "இழந்தவர்கள்" என்னும் நாட்டுக்கூத்து நூல் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி குரு மடத்தில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது

இஸ்ரவேலிய இழப்புக்களைச் சித்தரிக்கும் இந்நூலில் சமகால நிகழ்வுகளும் இழையோடுவதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சிவலிங்கராசா தெரிவித்தார்.

## பயிற்சி நெறி

கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சி நெறியொன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த 24ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதிவரை நடத்தப்பட்டது.

இப் பயிற்சியில் கால்நடைகள் பராமரிப்பு, உணவூட்டல், இனவிருத்தி நோய்களும் தடுப்பு முறைகளும் மண்ணைக் கணக்குப் பதிவேடுகள் வைப்பு முறைகள் என்பன தொடர்பான பயிற்சிகள் செய்முறைகளாகவும், போதனா முறைகளாகவும் வழங்கப்பட்டன. (க)

## காந்தி சிலை திறப்பு

தென்னாபிரிக்காவின் மிசோர்ண் மாகாணத்தின் தலைநகர் பீற்றர்மரிஸ்பேர்க்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தியின் சிலை ஒன்று இன்று திரை நீக்கம் செய்யப்படவுள்ளது.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவர் திரு. நெல்சன் மண்டேலா காந்தியின் சிலையை திரை நீக்கம் செய்து வைப்பார்.

மகாத்மா காந்தி தென் ஆபிரிக்காவில் 21 ஆண்டுகள் தங்கியிருந்தார் என்பதும், அந்தக் காலப் பகுதியில் அவர் அங்கு இனப்பாகுபாடுகளுக்கு எதிராக அகிம்சை வழியில் பல போராட்டங்களை நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஓ-5)

### சுதந்திரக்கட்சித்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சுதந்திரக் கட்சி விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

வெகு விரைவில் கட்சியின் வருடாந்த மாநாடு நடைபெறவுள்ளது. அப்போது சந்திரிகா கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்படுவார் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

அனுராவின் தீவிர ஆதரவாளரும், "ஹெல உறுமய" நிறுவுநருமான திலக் கருணாரதன கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள விடயம் முக்கியத்துவம் பெறுகிறது.

கருணாரத்னாவை கட்சியிலிருந்து வெளியேற்றக்கூடாது என்று அனுரா மகஜர் சமர்ப்பித்திருந்தபோதும் அதை மீறி கருணாரத்னாவை மத்திய செயற்குழு கட்சியிலிருந்து நீக்கிவிட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

### பூநகரிப் பாதை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மாகாணசபை தேர்தல்கள் ஆகியவற்றினால் தெற்கில் உருவான சூழ்நிலையே பாதை திறப்பது தொடர்பான முடிவை மேற்கொள்வதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

"மேற்படி பாதையைத் திறப்பது குறித்து நாம் சமர்ப்பித்த யோசனைக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் இன்னமும் பதிலளிக்கவில்லை; பந்து அரசின் பக்கமே இருக்கிறது." — என்று கொழும்புத் தமிழ்ப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் இலங்கை அலுவலக [illegible] நிக்கலஸ் கவலை தெரிவித்திருந்தது தெரிந்ததே. (உ-3)

## சமூகத்துறை ஊழியர்கள்: புதிய நியமனம் கிடைக்கும்

ஜனசக்தி நம்பிக்கை நிதியத்தின் கீழ் கிராம சேவையாளர் மட்டத்தில் மனித சக்தி வள அபிவிருத்தி சமூகத்துறை ஊழியர்களை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பத்து கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு ஒருவர் என்ற வீதம் இச்சமூகத்துறை ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை சித்தி எய்திய ஆண்களும், பெண்களுமே இந்த நியமனம் பெறத் தகுதி படைத்தவர்கள் என்றும் —

நியமனம் பெறுபவர்கள் சனசமூகநலன் துறையில் அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சனசமூக வளர்ச்சிப் பணிகளில் கிராம மக்களை ஈடுபட வைப்பதே இந்த சனசமூகத்துறை அதிகாரிகளின் கடமையாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## ஊழல் குற்றச்சாட்டு பட்டியல்; காங்கிரஸ் தயாரிக்கிறது!

தமிழக அரசுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் அடங்கிய பட்டியல் ஒன்றை தமிழக சட்டசபையின் காங்கிரஸ் குழு தயாரித்து வருகின்றது.

பட்டியல் தயாரிக்கும் பணி இன்னும் இரண்டு வாரங்களில் முடிவடைந்துவிடும் என்றும் —

அதன் பின்னர் அது மாநில ஆளுநரிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (த-எ)



## அச்சுக்கோப்பாளர்கள்

ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவமுள்ள அச்சுக்கோப்பாளர்கள் தேவை. ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். வேலைத் திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். பூரண சுயவிவரங்களுடன் 07 — 06 — 1993 திங்கட்கிழமைக்கு முன்னர் மனுச் செய்யவும். விண்ணப்பங்களை உபசரிப்பாளர் கரும பீடத்திலும் நேரில் கையளிக்கலாம்.

முகாமையாளர் (ஆளணி),

உதயன் வெளியீட்டகம்,

292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org